பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 17 | வெள்ளிக்கிழமை | 01.09.2023 | அதிர்வு 31

## ‘13’ பற்றி மஹிந்தர் மௌனம் எதற்காக?

### கம்மன்பில கேள்வி



“மரணித்துப்போன 13ஆவது திருத்தத்துக்கு உயிரூட்டும் வகையில் “பிளஸ்“ என்று கூறி கதை விட்ட மஹிந்த ராஜபக்ஷ இப்போது ஏன் 09



# நீதிமன்றத்தின் கட்டளையை மீறி குருந்திவிகாரையில் கட்டுமானம்

## தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர்நாயகம் உதாசீனமாக நடந்துள்ளார் என நீதிவான் விசனம்



- என்.புவியரசன் -

நீதிமன்றம் வழங்கிய கட்டளையைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகத்திற்கு இருந்தும் குருந்தூர்மலைதொடர்பில் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சரிவரப் பின்பற்றாது உதாசீனம் செய்திருக்கிறார் என முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது. 03

# குருந்தூர்மலை சிங்கள - பௌத்த மக்களின் சொத்து அவ்விகாரையை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது

## புத்தசாசன, சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உறுதி



“குருந்தூர்மலை சிங்கள பௌத்தர்களின் சொத்து. அங்குள்ள விகாரையை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது. அங்கு பௌத்தர்கள் சென்று வழிபடுவதை எவரும் தடுக்க முடியாது.”

– இவ்வாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

குருந்தூர்மலை தொடர்பில் நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை 03

# தென்னிலங்கை விபத்தில் தாயும் மகனும் உயிரிழப்பு

வாகன விபத்தில் தாயும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் காலி, கபராதுவை பிரதேசத்தில் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஹயஸ் வானும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 09

## இரகசியம்



குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் நேற்றைய கட்டளையின் பின்னர், அது தொடர்பில் இருவரிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் எனக்கு வந்தன.

ஒருவர் – வெளிநாட்டில் புலம்பெயர்ந்திருக்கும் 04

# 13 ஆவது திருத்தத்தை ரணிலும் முழுமையாக அமுலாக்கமாட்டார்

## மைத்திரிபால சிறிசேன ஆரூடம்



"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவ-தற்கு இந்த ஜனாதிபதியும் (ரணில் விக்க-ிரமசிங்கவும்) நடவடிக்கை எடுக்கமாட்டார் என்றே நான் நம்புகின்றேன்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய-தாவது:–

"அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாட்டை அனுப்புமாறு ஜனாதிபதி செயலாளர் கோரி இருந்தார். அதற்கு நாம் பதில் கடிதம் அனுப்பினோம். முதலில் இது விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட வேண்டும் எனவும், அப்போது அதில் திருத்த வேண்டிய விடயங்கள், உள்ளடக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான கட்சியின் கருத்தை தெரிவிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

13 இல் உள்ள சில அதிகாரங்களை பகிர்வதில் பிரச்சினை இல்லை. பொலிஸ் அதிகாரம் தொடர்பில் சர்ச்சை உள்ளது. நீங்கள் (ஊடகவியலாளர்) கூறியது போல் 7 ஜனாதிபதிகள் கைவைக்காத விடயத்தை இந்த ஜனாதிபதியும் செய்யமாட்டார் (13 ஐ முழுமையாக அமுல்படுத்தல்) என்றே நான் நம்புகின்றேன்." – என்றார்.

# சவூதியில் கடும் துன்புறுத்தல்களுக்குள்ளான மலையகத் தாய் இன்று நாடு திரும்புகின்றார்

சவூதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப் பெண்ணாகச் சென்றிருந்த நிலையில், அங்கு துன்புறுத்தல்களுக்கு உள்ளானார் எனக் கூறப்படும் மலையக பெண்ணான சரஸ்வதி புஷ்பராஜ், இன்று காலை இலங்கை வருகின்றார்.

அதிகாலை 4.20 மணிக்கு அவர் இலங்கை வருவார் எனவும், அவரை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் சரஸ்வதியை வெளிநாட்டுக்கு அனுப்பிய முகவர்கள் தெரிவித்தனர்.

சரஸ்வதி தொடர்பான செய்தியை ஊடகங்கள் நேற்று வெளியிட்டிருந்தன.

சரஸ்வதி, இரத்தினபுரி மாவட்டம், எகலியகொட, பனாவல தோட்டத்தைச் சேர்ந்தவர். இவருக்கு இரு பெண் பிள்ளைகள் உட்பட மூன்று குழந்தைகள் உள்ளனர்.

வறுமை காரணமாக கடந்த ஜூலை 15 ஆம் திகதி சவூதி அரேபியாவுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

அவர் வேலைசெய்யும் வீட்டில், வீட்டுக்காரர்களால் கடுமையாகத் துன்புறுத்தப்பட்டுள்ளார் எனவும், உணவு கூட முறையாக வழங்கப்படவில்லை எனவும் தமது குடும்பத்தாருக்கு அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனால் அவரின் தொலைபேசியும் வீட்டுக்காரர்களால் பறிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தன்னை எப்படியாவது காப்பாற்றுமாறு கண்ணீர்மல்க சரஸ்வதி இலங்கையர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அவர் அழுது புலம்பும் காட்சி விழிநீரை பெருக்கெடுக்க வைக்குமளவுக்கு அமைந்திருந்தது.

இது தொடர்பான காணொலி வெளியான பின்னர், அவரை வேலைக்கு அனுப்பிய முகவர்கள், சவூதியில் உள்ள தமது நிறுவனத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். பிறிதொரு வீட்டில் வேலை பெற்றுத் தருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். எனினும், தான் நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று சரஸ்வதி கூறியுள்ளார். இதன்படி அவருக்கான விமான ரிக்கெட்டும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இன்று காலை இலங்கையில் அவர் இருப்பார்.

# எரிபொருள் விலை அதிரடியாக உயர்வு

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 361 ரூபாவாகும்.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 42 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 417 ரூபாவாகும்.

ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 341 ரூபாவாகும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை ஒரு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் புதிய விலை 359 ரூபாவாகும்.

அதேபோல், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் புதிய விலை 231 ரூபாவாகும்.

## நீதிமன்றத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளைகளையை மீறி தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடந்த பெப்ரவரிமாதம் 23ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய, முல்லைத்தீவு நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் கட்டளையே நேற்று (ஓகஸ்ட் 31) முல்லைத்தீவு நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:-

கடந்த 2022ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12ஆம் திகதி குருந்தூர்மலையில் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த விகாரைக்கு கலசம் ஒன்றை நிறுவுவதற்கும், "கபோக்" கல்லினாலான புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கும் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ள குருந்தூர்மலைக்குச் சென்றபோது அங்கு பௌத்தக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது தொடர்பில் அப்பகுதி மக்களால் அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில் குருந்தூர்மலை தொடர்பான வழக்கிலக்கம் AR/673/18 இல் குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து, குருந்தூர்மலையில் எந்தத் தரப்புக்களும் கட்டுமானங்கள் எவற்றினையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கட்டளை பிறப்பித்த பிற்பாடும் அங்கு தொடர்ந்தும் பௌத்த கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதாக நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர்.

அத்தோடு அவ்வாறு குருந்தூர் மலையில் பௌத்தகட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்களையும் நீதிமன்றில் அவர்கள் சமர்ப்பித்திருந்தனர்.

அதற்கமைய இந்த வழக்கினை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் ரி.சரவணராஜா கடந்த 2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14ஆம் திகதி அன்று, குருந்தூர்மலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள பௌத்தக் கட்டுமானங்களை அகற்றுமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஜுலைமாதம் 19ஆம் திகதி, குறித்த குருந்தூர்மலை தொடர்பான வழக்கின் மீது சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து வருகைதந்த சட்டத்தரணிகளால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு குறித்த வழக்கு மீளவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த கட்டுமானங்களை அகற்ற முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருப்பதானது, இனங்களுக்கிடையில் சமாதானக்குலைவினை ஏற்படுத்துமென சட்டமாஅதிபர் திணைக்களத்திலிருந்து வருகைதந்த சட்டத்தரணிகள் முல்லைத்தீவு நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தனர்.

சட்டமாஅதிபர் திணைக்கள சட்டத்தரணிகளின் கருத்துக்களைச் செவிமடுத்த நீதவான், அன்றைய தினமே உடனடியாக குருந்தூர்மலைக்குச் சென்று களவிஜயமொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்தார்.

அதனடிப்படையில் குருந்தூர்மலைக்கு களவிஜயம் மேற்கொண்ட நீதவான் அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆய்வு செய்து, குறிப்புக்களை எடுத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து இது தொடர்பில் கட்டளை வழங்கியநீதிபதி, கடந்த 2022ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னிருந்த நிலையை பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதென வும் கடந்த 2022ஆம்ஆண்டு ஜுலை மாதம் 19ஆம் திகதியன்று கட்டளை பிறப்பித்திருந்தார்.

எனினும், நீதிமன்றம் இவ்வாறு கட்டளை வழங்கிய பிற்பாடும், நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர்மலையில் தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

குறிப்பாக கடந்த 23.02.2023 அன்று குருந்தூர் மலைக்கு, தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களும், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரும் கள விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விஜயத்தின்போது இவ்வாறு நீதிமன்றத்தின் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவது உறுதிசெய்யப்பட்டது.

இந்நிலையில் இவ்வாறு நீதிமன்றக் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் இடம்பெறுவது தொடர்பில் களவிஜயத்தில் ஈடுபட்டவர்களுள் ஒருவரான முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடந்த 23.02.2023 அன்றைய தினமே முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை அதனைத் தொடர்ந்து 02.03.2023அன்று முல்லைத்தீவு நீதிமன்றில் யுசுஃ673ஃ18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டு மீண்டும் கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடு செய்யப்பட்டது.

இந் நிலையில் அவ்வாறு குருந்தூர் மலையில் மேலதிகமாக மேம்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் கண்காணிப்பதற்கு கடந்த ஜுலை மாதம் 04 ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா மீண்டும் குருந்தூர் மலைக்குக் களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

அந்தக் களவிஜயத்தின்போது குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற மேம்படுத்தல் வேலைகள் தொடர்பில் நீதிவானாக் ஆராயப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பொலிஸார் மற்றும், தொல்லியல் திணைக்களம் இது தொடர்பிலான பதில் அறிக்கைகளை நீதிமன்றின் முன் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டது. முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்புக்கள் நீதிமன்றில் முன்னிலையாகி இது தொடர்பிலான தமது விளங்கங்களை நீதிமன்றிற்கு வழங்கியிருந்தனர்.

இந் நிலையில் இந்த வழக்குடன் தொடர்புடைய அனைத்துத் தரப்புக்களினதும் விளங்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து நீதிமன்றம் வழக்கின் கட்டளை வழங்குவதற்காக ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்திருந்தது.

அதன்படி கட்டளையை வழங்குவதற்காக நேற்று முல்லைத்தீவு நீதிமன்றில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்த வகையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஜுலை மாதம் 19ஆம் திகதி முல்லைத்தீவு நீதிவான் குருந்தூர் மலைக்கு மேற்கொண்ட களவிஜயம் மற்றும், கடந்த ஜுலை மாதம் 04ஆம் திகதி நீதிவானால் மேற்கொள்ளப்பட்ட களவிஜயம் என்பவற்றை கருத்திற்கொண்டு இந்த வழக்கிற்கான கட்டளை வழங்கப்பட்டது.

அந்தக் கட்டளையில் ஏற்கனவே நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளைகள் மீறப்பட்டிருக்கின்றன என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அத்தோடு நீதிமன்றினால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு விரோதமாக குருந்தூர்மலையில் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன எனவும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

மேலும் கடந்த 2022ஆம் ஆண்டு ஜுலைமாதம் 19ஆம் திகதி களவிஜயத்தின்போது நீதிமன்றம் அவதானித்த கல்லொன்று அங்கு இருக்கவில்லை எனவும், அதேவேளை அங்கு புதிதாக பெயர்ப்பலகை ஒன்று அவதானிக்கப்பட்டாதகவும், அதனைபோல இன்னும் பலவிடயங்களையும் இரண்டாவது களவிஜயத்தின்போது அவதானிக்கமுடிந்ததாக நீதிமன்றம் இதன்போது சுட்டிக்காட்டியது.

குறித்த குருந்தூர்மலைப் பிரதேசத்தில் நீதிமன்றம் வழங்கிய கட்டளையைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு இருப்பதாகவும், எனினும் நீதிமன்றால் இதற்குமுன் வழங்கப்பட்ட கட்டளைகள் குறித்த தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர்நாயகம் சரிவரப் பின்பற்றவில்லை எனவும், நீதிமன்றக்கட்டளைகள் உதாசீனம் செய்யப்பட்டிருப்பதாகவும் நீதிமன்றம் தனது தற்போதைய கட்டளையில் குறிப்பிட்டிருக்கின்றது.

## குருந்தூர்மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர்நாயகம் சரிவரப் பின்பற்றாது உதாசீனம் செய்திருக்கிறார் என முல்லைத்தீவு நீதிமன்றம் நேற்றுக் கட்டளை வழங்கியுள்ளது.

அது குறித்துக் கேட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

"குருந்தூர்மலை தொடர்பாகவோ அல்லது அங்குள்ள விகாரை குறித்தோ முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்து வருகின்றன கட்டளைகள் - தீர்ப்புக்கள் தொடர்பிலோ என்னால் பதிலளிக்க முடியாது. ஆனால், குருந்தூர் மலை சிங்கள பௌத்தர்களின் சொத்து. அங்குள்ள விகாரையை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது. அங்கு பௌத்தர்கள் சென்று வழிபடுவதை எவரும் தடுக்க முடியாது. இந்த நிலைப்பாட்டில் நான் உறுதியாகவுள்ளேன். குருந்தூர்மலையை வைத்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் சிங்கள பௌத்தர்களுக்குக் கிடையாது. ஆனால், குருந்தூர்மலையை வைத்து அரசியல் செய்வதைத் தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்." - என்றார்.




# சினோபெக் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெட்ரோல், டீசலுக்கு 3 ரூபா விலைக்குறைப்பு

சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக பெட்ரோல் மற்றும் டீசலுக்கு 3 ரூபா விலைக்குறைப்பு வழங்கப்படுகிறது என சினோபெக் லங்கா எண்ணெய் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமது நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களினதும் செயற்பாடுகளை ஒக்டோபர் மாதத்திற்கு முன்னதாக ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது என அந்நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இருந்த கொட்டாவ எரிபொருள் நிலையம் தற்போது சினோபெக் லங்கா எண்ணெய் நிறுவனத்தின் கீழ் விற்பனை செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் உள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சினோபெக் நிறுவனத்திற்கு வழங்கப்படவுள்ளமையுடன், மேலும் 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களைப் புதிதாக ஆரம்பிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய, 20 வருடங்களுக்கு இலங்கையின் எரிபொருள் சந்தையில் செயற்பட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு நண்பர் - எனது பத்திரிகை மற்றும் பத்தி எழுத்துக்களின் நீண்ட கால வாசகர்.

மற்றவர் - நமது உள்ளூர்ச் செய்தியாளர்.

இருவரின் கேள்விகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

"குருந்தூர்மலைக் கட்டுமானம் தொடர்பில் நீதிமன்றத்தின் உத்தரவு மீறப்பட்டதாக புதிய கட்டளையை வழங்கியுள்ள நீதிவான், சம்பந்தப்பட்ட தரப்புக்கு அதற்கான தண்டனை ஏதும் வழங்கவில்லையே. வெறும் அவதானிப்பை மட்டும் - நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டுள்ளது என்ற அவதானிப்பை மட்டும் - கட்டளையாக்கிக் கொண்டமையுடன் நீதிவான் நிறுத்திக் கொண்டமை ஏன்?" - என்பது ஒருவரின் கேள்வி.

"சரி. நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளது. இனி என்ன? அப்படி மீறப்பட்டுள்ளது என்று நீதிமன்றம் கட்டளை பிறப்பிப்பதுடன் விடயம் முடிந்து விட்டதா?" - இது மற்றையவரின் கேள்வி.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான தற்போதைய செய்தியை வாசிக்கும் பல வாசகர்களின் மனதிலும் இந்த வினாக்கள் எழும் என்பதால் சட்டப் பின்புலத்தில் நின்று, இது பற்றிய சிறிய பதிலை - விளக்கத்தை - இன்று தருவது பொருத்தமானது என நினைக்கிறேன்.

ரவிகரன் மற்றும் குருந்தூர்மலை ஆதிசிவன் அய்யனார் ஆலய நிர்வாகத்தினரின் முறைப்பாட்டின் மீது இவ்விடயத்தில் தலையிட்ட நீதிமன்றம், தொல்லியல் மரபை அப்படியே பேணுவதைத் தவிர அங்கு புதிய கட்டுமானம் கட்டுவது தொல்பொருள் திணைக்களத்தின் கடமையல்ல என்ற அடிப்படையில், அங்கு தொல்பொருள் மரபுரிமைகளைப் பேணும் விதத்தில் புதிய கட்டுமானங்கள் எழாமல் பார்த்துக் கொள்ளும்படி கட்டளை பிறப்பித்தது.

இப்போது அந்தக் கட்டளை மீறப்பட்டிருப்பதாக அது அவதானித்து, அதைத் தனது நேற்றைய கட்டளை மூலம் நீதிமன்றம் தெளிவுபடுத்தி இருக்கின்றது.

நீதிமன்றத்தின் கட்டளை மீறப்பட்டிருந்தால் அது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை ஆகும். அதை ஒட்டி நீதிமன்றம் ஒன்று நடவடிக்கை எடுப்பதற்கு சில கட்டுப்பாடுகள் உள்ளன.

கீழ்நிலை நீதிமன்றம் ஒன்று தன்னுடைய உத்தரவு நீதிமன்ற வளாகத்துக்குள் மீறப்பட்டிருந்தால், அதை ஒட்டிய நீதிமன்ற அவமதிப்புத் தண்டனை உத்தரவு ஒன்றை வழங்க முடியும். ஆனால் நீதிமன்ற வளாகத்துக்கு வெளியில் அது நடந்தால், அத்தகைய நீதிமன்ற அவமதிப்புக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விண்ணப்பித்துத்தான் நிவாரணம் பெற முடியும்.

குருந்தூர்மலை விகாரைக் கட்டுமானம் நீதிமன்றத்திற்கு வெளியில் நடந்தது. ஆகவே முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் அது தொடர்பில் நீதிமன்ற அவமதிப்பு உத்தரவையோ, தண்டனையையோ குறிப்பிட்டு கட்டளை எதையும் வழங்க முடியாது. வழங்கவும் இல்லை.

ஏற்கனவே இந்த விவகாரம் இனங்களுக்கு இடையில் குரோதத்தையும் முறுகலையும் ஏற்படுத்தும் விடயம் என்று சட்டமா அதிபரின் பிரதிநிதி நீதிமன்றத்தில் பிரசன்னமாகி தெரிவித்திருக்கின்றமையால், நீதிமன்றத்தின் கட்டளையை மீறி நடைபெற்ற கட்டுமானத்தை உடைக்கும்படியான கட்டளை எதையும் நீதிமன்றம் பிறப்பிக்கவில்லை என்று நினைக்கிறேன்

அதேசமயம் நீதிமன்றக் கட்டளையை மீறியமை மூலம் நீதிமன்றை அவமதிக்கும் நடவடிக்கை இடம் பெற்றிருக்கின்றது என்று தெரிவித்து, இந்த விடயத்தை உரிய மேல் நடவடிக்கைக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் இதுவரை பரிந்துரை செய்து கட்டளை எதையும் ஆக்கவில்லை என்றும் தெரிகின்றது.

அப்படியானால் நேற்றைய கட்டளைக்குப் பின்னர் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தின் நேற்றைய கட்டளைக்கு எதிராக தொல்பொருள் திணைக்களமோ அல்லது அரசுத் தரப்போ அல்லது வேறு ஈடுபாடு உள்ள தரப்புகளோ அடுத்த நிலை நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து, முல்லைத்தீவு நீதிமன்றத்தின் நேற்றைய கட்டளையை வறிதாக்கும்படி கோரலாம்.

அதேசமயம், முல்லைத்தீவு நீதிமன்றத்தின் கட்டளையை மீறியதன் மூலம் நீதிமன்ற அவமதிப்பு இடம்பெற்றிருப்பதாகத் தெரிவித்து, அது தொடர்பில் உரிய தரப்புகளுக்கு எதிராகத் தண்டனைத் தீர்ப்பு வழங்கக் கோரி தமிழர் தரப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செல்லலாம். அதற்கான பொறுப்பை தமிழர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஏற்றிருக்கின்றார் என்று அறிய வந்தது.

அடுத்து வரும் வாரத்தில் இவ்வழக்கின் போக்கு ஓரளவு தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.



# நல்லூரான் 11 ஆம் நாள் உற்சவ வீதியுலா



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவின் பதினொராம் நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமேதராக, முருகப்பெருமான் மயில் வாகனத்தில் வீதியுலா வந்தார்.

படங்கள் :-பிரபாகரன் டிலக்சன்











# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேராளர் மாநாடு இன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்!




–எஸ்.நிதர்ஷன் –

வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் உட்பட அதிபர் ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வை வலியுறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தாம் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரித்துள்ளார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 66 ஆவது பேராளர் மாநாடு இம்முறை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

இதற்கமைய யாழ்ப்பாண வீரசிங்க மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இந்த மாநாடு நடைபெற இருக்கிறது. இந்த மாநாட்டில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும் அதிபர், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொள்ள உள்ளனர்.

இதில் முக்கியமாக வட மகாணத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவதானித்து அவை தொடர்பிலும் கல்வித்துறையில் நாட்டு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க வலியுறுத்தும் விதத்திலும்தான் இந்த மாநாடு அமையும்.

அதே போன்று அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள், அதிபர், ஆசிரியர் சேவை யாப்புகளில் உள்ள பிரச்சுனைகள் மற்றும் சம்பள நிலுவை சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளிட்ட சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்க வேண்டுமென்று இந்த மாநாட்டில் வலியுறுத்த இருக்கிறோம்.

இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்தி அடுத்த வருடத்திற்கான போராட்ட மையக்கல்லாக இந்த மாநாட்டில் தீர்மானங்களை எடுக்க உள்ளோம். இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வை ஏற்படுத்தும் வரை தொடர்ந்தும் போராட்டங்களை நடாத்துவோம்.

– என்றார்.

# நோர்வூட்டில் தேயிலைச் செடிகளிடையே களவாக மாணிக்கக் கற்கள் தேடி அகழ்வு

## பாரிய குழிகளால் தொழிலாளருக்குப் பேராபத்து







– செ.தி.பெருமாள் –

தேயிலை உற்பத்தியைப் பாதிக்கும் அளவில் தேயிலை செடிகளை அகற்றி, சட்ட விரோதமான முறையில் மாணிக்க கற்கள் அகழும் இரகசிய நடவடிக்கை பாரிய அளவில் நோர்வூட் பொலிஸ் பிரிவில் உள்ள நோர்வூட் கீழ் பிரிவில் இடம் பெற்று வருகிறது எனத் தெரிவித்து, அந்தத் தோட்டத் தொழிலாளர்கள் ஒரு நாள் பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து உள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

பெண் தொழிலாளர்கள் பணிக்குச் சென்று கொழுந்து பறிக்கும் சமயத்தில் அகழ்ந்து உள்ள அந்தக் குழிகளில் தவறுதலாக விழும் பட்சத்தில் பாரிய காயங்கள் ஏற்படும் அபாயமும் மரணிக்கும் அபாயமும் உள்ளது.

சட்ட விரோதமாக மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வரும் நபர்கள் அகழ்ந்து உள்ள குழிகளை மூடாமல் சென்று விடுவதே இதற்குக் காரணம்.

– என்று கூறுகின்றனர்.

உடன் கவனம் செலுத்தி அந்தக் குழிகளை மூட தோட்ட நிர்வாகம் முன்வர வேண்டும் எனவும், சட்ட விரோதமாக மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வருவோரைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர் அத்தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள்.

# கனடா அனுப்புவார் எனக் கூறி வவுனியாவில் அறுவரிடம் பண மோசடி செய்த நபர் கைது!

கனடா அனுப்புவதாக கூறி வவுனியாவில் ஆறு பேரிடம் பணம் பெற்று மோசடி செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

வவுனியாவின் பட்டக்காடு, திருநாவற்குளம், தவசிகுளம், மல்லாவி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 6 நபர்களிடம் கனடா அனுப்புவார் எனக் கூறி யாழ்ப்பாணம், நாவற்குழி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் பணம் பெற்றுள்ளார்.

ஒருவரிடம் இருந்து 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் 6 பேரிடம் பணம் பெற்றுள்ளமையுடன், பிறிதொருவரிடம் 3 பவுண் சங்கிலி ஒன்றையும் பெற்றுள்ளார். எனினும் கனடா அனுப்பாது மோசடி செய்ததார் எனப் பாதிக்கப்பட்ட நபர்கள் வவுனியா குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

அந்த முறைப்பாட்டுக்கு அமைவாக வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரத்நாயக்கா தலைமையில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியைச் சேர்ந்த 41 வயது நபர் ஒருவரை அவர்கள் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணில் எனும் நாரதர்

'நாரதர் கலகம் நன்மையில் முடியும்' - என்று ஒரு பேச்சுக்குச் சொல்வதுண்டு. நாரதர் ரணில் கிளப்பி விட்ட கலகம் ஒன்று ஏதோ ஒரு வகையில் நன்மையாகியிருப்பது கவனிக்கத்தக்கது.

நாடாளுமன்றத்தில் தமது கட்சியில் ஒரே ஒரு எம். பியின் பின்புல ஆதரவோடு ஜனாதிபதிப் பதவிக்கு வந்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க தமது அரசை ஆட்சிக்கட்டில் பேணுவதற்கு முற்று முழுதாக மொட்டுக் கட்சியிலேயே தங்கியிருக்கின்றார்.

அத்தகையவருக்கு அரசியல் ரீதியாகத் தமது செயற்பாட்டு எல்லை எதுவரை என்பது நன்கு தெரியும். அது மட்டுமல்ல, தாம் கண் வைத்திருக்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் நிற்பதற்கும், வெல்வதற்கும் மொட்டு கட்சியின் பின்புல ஆதரவும் ஒத்துழைப்பும் மிக முக்கியம் என்பதும் கூட அவருக்கு நன்கு தெரியும்.

ஆகையினால் இயன்றவரை மொட்டுக் கட்சியை எதிரித் தரப்பில் நிறுத்தாமல், அரசியல் காய் நகர்த்தல்களை மிகச் சாதுரியமாகக் கொண்டு செல்ல வேண்டியது அவரது தவிர்க்க முடியாத கட்டாய மாகும்.

இந்தப் புறச் சூழலில், அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்துவது என்பது நிறைவேற்றதிகார ஜனாதிபதி என்ற முறையில் தமது அதிகாரத்துக்குட்பட்ட விடயம் என்றாலும் கூட, அரசியல் ரீதியில் அது சாத்தியமற்றது என்பது அவருக்கு நன்கு புரிந்த விடயம்.

ஆயினும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறையாக்கம் செய்வது என்ற பந்தை மெல்ல அரசியல் களத்துக்குள் தூக்கி எத்தி விட்டிருக்கின்றார் அவர்.

தாம் எதிர்பார்க்கும் அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரை அந்தப் பந்தை அரசியல் களத்தில் பல்வேறு கட்சிகளும், தரப்புகளும், இனவாத அணிகளும் மாறி மாறி அடிக்கும், அதனால் கிளம்பும் பேரினவாத வெறியுணர்வு - மேலாதிக்கப் போக்கு - தமக்குச் சாதகமான அரசியல் கால, கள நிலைமையைத் தரும் என்றெல்லாம் அவர் கணக்கிட்டிருக்கக் கூடும்.

13ஆம் திருத்தத்தில் உணர்ச்சிபூர்வமான விடயமான பொலிஸ் அதிகாரப் பகிர்வை தரமாட்டேன் என்ற முன் நிபந்தனையோடு இந்த அரசியல் பந்தை பொதுக் களத்துக்குள் அவர் எத்திவிட்டிருப்பதுதான் இதில் முக்கியமான விடயம்.

ஆனால், இதன் பயனாக 13 ஆவது திருத்தம் தொடர்பாக தென்னிலங்கைக் கட்சிகளின் முழு ரூபத்தையும் தமிழர்கள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் முழுமையாகவும் அறியக்கூடிய வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

பொலிஸ் அதிகாரம் இல்லாமல் 13 ஐ வழங்குவது குறித்தே ரணிலில் இருந்து ஜே.வி.பியினர் வரை பேசுகின்றனர். அதுவே சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடும் கூட. மொட்டுக் கட்சியினரும் மற்றைய பௌத்த - சிங்களப் பேரினவாதிகளும் 13 இல் இப்போது வழங்கப்பட்டவற்றைக் கூட வழங்கத் தேவையில்லை என்ற மேலாதிக்க வெறிப்போக்கிலேயே இருக்கின்றார்கள்.

ஆக, அரசமைப்பில் இருக்கும் பதிமூன்று மூலமான தீர்வு என்றளவிற்கு சஜித் மட்டுமே இணங்கியிருக்கின்றார். அவரும் கூட ஒற்றையாட்சி முறை என்பதில் விடாப்பிடியாக நிற்கின்றார்.

எவ்வாறாயினும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் தென்னிலங்கைக் கட்சிகளின் உண்மைச் சொரூபத்தை ரணிலின் 13 பற்றிய அறிவிப்பு வெளிக்காட்டி விட்டது என்பது உண்மை.

# ஓகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் வீழ்ச்சி

ஓகஸ்ட் மாத நிறைவில் பணவீக்கம் 4 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த தரவுகள் வெளியாகியுள்ளன.

இந்த ஆண்டின் பெப்ரவரி மாதம் நாட்டின் பணவீக்கம் 5.06 வீதமாக பதிவாகியிருந்தது.

ஓகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 4 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த மாதம் உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பு மறை பெறுமதியில் காணப்படுகின்ற போதிலும், உணவல்லா பொருள்கள் மற்றும் சேவைகளில் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# துமிந்த நாகமுவவிற்கு நீதிமன்றம் நோட்டீஸ்



எதிர்வரும் செப்டம்பர் 6 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவவிற்கு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று அழைப்பாணை (நோட்டீஸ்) பிறப்பித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்துள்ள விசாரணைகளுக்கமைய, துமிந்த நாகமுவவை நீதிமன்றத்திற்கு அழைக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஆராய்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுளளது.

கடந்த 11 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பொன்றில் துமிந்த நாகமுவ வெளியிட்ட கருத்துத் தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவித்திருந்தார்.

ஐரோப்பாவில் அமைந்துள்ள தீவொன்றில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் முதலீடு செய்துள்ளார் எனவும், அதனுடன் மக்கள் விடுதலை முன்னணிக்கும் தொடர்புள்ளது என்றும் துமிந்த நாகமுவ வெளியிட்ட கருத்து தொடர்பில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் துமிந்த நாகமுவவிடம் வாக்குமூலமொன்றை பதிவுசெய்ய வேண்டியுள்ள போதிலும், அவர் இருக்கும் இடத்தைக் கண்டறிய முடியாமை, அவரை தொடர்பு கொள்ள முடியாமை ஆகிய காரணங்களால் அவரை நீதிமன்றத்திற்கு அழைக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தது.

இதற்கமைய, முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவவிற்கு, நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கோட்டை நீதவான் திலின கமகே அழைப்பாணை பிறப்பித்துள்ளார்.

# நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் குறைவு!

நாட்டின் சில பகுதிகளில் தற்போது இடைக்கிடையே மழை பெய்தாலும் தமது திணைக்களத்தின் கீழுள்ள நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு இன்னும் அதிகரிக்கவில்லை என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

73 நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவானது 8 இலட்சம் ஏக்கர் அடியாக காணப்படுகிறது என நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர்முகாமைத்துவ பிரிவு பணிப்பாளர் பொறியியலாளர் சுதர்ஷனி விதானபத்திரண தெரிவித்துள்ளார்.

இது நீர்த்தேக்கங்களில் இருக்கவேண்டிய நீர் கொள்ளளவில் 27 வீதம் என அவர் கூறியுள்ளார்.



# மணல் அகழ்வை ஆட்சேபித்து நேற்றும் வெருகலில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை வெருகல் – நாதனோடை பகுதியில் மணல் அகழ்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெருகல் மக்கள் நேற்று வியாழக்கிழமை நாதனோடை பகுதியில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

வெருகல் – நாதனோடை பகுதியில் ஆயிரம் கியூப் மணல் அகழ்வதற்கான அனுமதி தனியார் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் அவ்விடத்தில் மணல் அகழப்பட்டால் அது வெருகல் ஆற்றின் அணைக்கட்டை உடைக்கும் அபாயம் இருப்பதாகவும், இதனால் மக்களுடைய உடைமைகள், வாழ்வாதாரம் என்பன பாதிக்கும் என்பதனால் அப்பகுதி மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினமும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 28ம் திகதி மண் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, மண் அகழ்வு தற்காலிகமாக கைவிடப்பட்டது. எனினும் அன்று இரவு 9.00 மணியளவில் மக்களை அச்சுறுத்தும் முகமாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வட்டவான் கிராம அபிவிருத்திச் சங்க தலைவரான கதிர்காமத்தம்பி திருநாவுக்கரசு மற்றும் வட்டவான் மரண சகாயச் சங்கத் தலைவரான தர்மலிங்கம் ஜெயகாந்தன் ஆகியோர் ஈச்சிலம்பற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மறுநாள் 29 ஆம் திகதி மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள்.

அத்துடன், மேலும் சிலரை பொலிஸார் தேடிவருகின்றனர். இவ்வாறான நிலையில் மணல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றவர்களை மறைமுகமாக அச்சுறுத்தி பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி பொலிஸார் கைது செய்கின்றனர் எனவும், பக்கச்சார்பாக நடந்து கொள்கின்றனர் எனவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

வெருகல் கங்கையில் சேருகின்ற, நீரோட்டத்தை தடை செய்கின்ற மணலை அகழ்வதற்கு எந்தவித எதிர்ப்பையும் தாம் தெரிவிக்கவில்லை எனவும் அவற்றை முறையான கள ஆய்வுகளின் பின்னர் அகழ்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் 7 மாதங்களில் 5,456 முறைப்பாடுகள்!

இந்த வருடம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் ஐயாயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முத்ச்லாம் திகதி முதல் ஜுலை 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 5,456 முறைப்பாடுகள் கிடைக்கப. பெற்றுள்ளன என அதன் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்தார்.

அவற்றில், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1,296 முறைப்பாடுகளும், கடுமையான காயங்கள் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் 163 முறைப்பாடுகளும், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 242 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளன.

மேலும், சிறுவர்கள் யாசகம் எடுப்பது தொடர்பில் 196 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என உதய குமார அமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்கள் யாசகம் எடுப்பது தொடர்பான முறைப்பாடுகள் பெரும்பாலும் கொழும்பு மற்றும் நகர்ப்புறங்களில் இருந்து பதிவாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

இதேவேளை, சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதல் மற்றும் இணையவெளியில் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக 110 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.



சிறுமிகள் தொடர்பில் 76 முறைப்பாடுகளும், சிறுவர்கள் தொடர்பில் 31 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக அவை ஏற்கனவே பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, அந்த அதிகார சபையினால் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டு தேசிய திட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# இன்று முதல் எதிர்வரும் 3 நாள்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

இன்று முதல் எதிர்வரும் 03 நாள்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு அபாயம் அதிகம் நிலவும் பகுதிகளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் நளீன் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

வீடுகள் தோறும் சென்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கைளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது என அவர் கூறியுள்ளார்.

நாட்டில் இதுவரை 61 ஆயிரத்து 697 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் மாத்திரம் 30 ஆயிரத்து 147 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

28 பகுதிகள் அதி அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் நளீன் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

# மேலும் ஆறு லட்சம் பயனாளிகளுக்கு இன்று முதல் அஸ்வெசும கொடுப்பனவு

அஸ்வெசும திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மேலும் சில பயனாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதி, இன்று முதல் வங்கிகளுக்கு விடுவிக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

சுமார் ஆறு லட்சம் பயனாளிகளுக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என நலன்புரி நன்மைகள் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கமல் பத்மசிறி குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்குகளை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலனை செய்யும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கமல் பத்மசிறி குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, அஸ்வெசும கொடுப்பனவை செலுத்துவதற்காக மாத்திரம் நேற்று முன்தினம் அரச வங்கிகள் திறக்கப்பட்டன.

முதலாம் கட்டத்தின் கீழ் 8 இலட்சம் குடும்பங்களுக்காக அஸ்வெசும கொடுப்பனவு வழங்கப்படுகிறது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதற்கான நிதி திறைசேரியில் இருந்து கடந்த 28 ஆம் திகதி வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டது.

# வசந்த முதலிகே உள்ளிட்ட மூன்று பேருக்கு பிடியாணை

வழக்கொன்றில் ஆஜராகாமையினால் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ரத்கரவ்வே ஜினரத்ன தேரர் ஆகியோருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்ட வழக்கில் ஆஜராகாமையினால் மூவருக்கு எதிராகவும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிடி



யாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த திகதியில் கொழும்பிலுள்ள தனியார் கட்டடமொன்றுக்கு சொந்தமான வாகன நிறுத்துமிடத்திற்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார்.

## தென்னிலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

23 வயதுடைய இளைஞரும், அதில் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த அவருடைய தாயாரும் (வயது 51) உயிரிழந்துள்ளனர்.

இருவரும் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளனர் என்றும், ஹயஸ் வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## '13' பற்றி மஹிந்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மௌனமாக இருக்கின்றார்?"

– இவ்வாறு நேற்று கேள்வி எழுப்பியுள்ளார் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"மஹிந்த ராஜபக்ஷ, 13 பிளஸ் என்று தமிழ் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியமையால்தான் 2015இல் தோற்கடிக்கப்பட்டார். அந்த வலியை உணர்ந்துதான் இப்போது அவர் "13" தொடர்பில் வாய் எதுவும் திறக்காமல் உள்ளார் என்று நாம் நினைக்கின்றோம். அவரின் கட்சியின் பொதுச்செயலாளர் மற்றும் உறுப்பினர்கள்தான் "13" தொடர்பில் பேசுகின்றார்கள். ஆனால், மஹிந்த எந்தக் கருத்தையும் வெளியிடாமல் அமைதி காக்கின்றார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கமாட்டார். ஏனெனில் மஹிந்தவுக்கு நடந்தது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனக்கும் நடக்கும் என்ற அச்சம் ரணிலுக்கு இருக்கும். இதை அவருக்கு நாம் எச்சரிக்கையாகவே முதலில் தெரிவித்து விட்டோம்." – என்றார்.




# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com




# என்னுடைய வீட்டுக்குப் பாதுகாப்பு நான் கேட்டு வழங்கப்பட்டது அல்ல!

## நிலைமையைத் தெளிவுபடுத்துகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.



– எஸ்.நிதர்ஷன்–

"எனது வீட்டின் முன்பாகப் போராட்டம் நடைபெற்ற போது எங்களுடைய பாதுகாப்புச் சம்பந்தமாக வான் படையினரும் காவல் துறையினரும் என்னிடம் கேட்ட போது – அதிலும் விசேஷமாக என்னுடைய வீட்டுக்குள்ளே பாதுகாப்பு வழங்குவது சம்பந்தமாக என்னிடம் கேட்ட போது – நான் அதை மறுத்து இருந்தேன். அதேபோன்று வீட்டிற்கு வெளியிலே பாதுகாப்பு வழங்குவது சம்பந்தமாக கேட்டபோதும் என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்க செய்ததாக நீங்கள் எதையும் செய்யக் கூடாது என்பதைக் கூறியிருந்தேன்."

– தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள எனது வீட்டைச் சுற்றி எனக்கு எதிராகவும், எங்களுடைய அமைப்பான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிராகவும் போராட்டங்கள் நடைபெற்றன.

அந்தப் போராட்டங்களின் முக்கியமான நோக்கமாகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகளுக்கு எதிராக செயற்படுவதாகவும், பௌத்த விகாரைகளையும் பௌத்த தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த சொத்துக்களையும் அழிப்பதாகவும் அந்த வகையில் செயற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

அதேபோன்று சிங்கள மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயல்படுவதாகவும், சிங்கள தேசமாக இருக்கக்கூடிய கொழும்பிலே சொத்துக்களை வைத்துக்கொண்டு, காலம் காலமாக பாட்டனார், தகப்பனார், நான் என மூன்று சந்ததிகளும் பாதுகாப்பாக வாழ்ந்து கொண்டிருப்பதைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் என்னுடைய குடும்பம் பாதுகாப்பாக வாழ்வதாகவும், அதே போல வடகிழக்கிலும் சிங்கள மக்களும் தாங்கள் விரும்பியபடி எங்கு வந்தும் வாழ்வதற்கு இடமளிக்க வேண்டும் என்ற கோணத்திலும் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன எனக் கூறப்பட்டிருக்கிறது.

என்னைப் பொறுத்த வரையில் அல்லது எமது அமைப்பைப் பொறுத்த வரையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அதை எதிர்க்க விரும்பினால் போராட்டங்களை செய்வதற்கு அவர்களுக்கு முழு உரிமையும் இருக்கிறது. அதை நாங்கள் கேள்விக்கு உட்படுத்தப் போவதில்லை. அது அவர்களின் முடிவு.

இந்த நிலைமையில்தான் எனது வீட்டின் முன்பாகப் போராட்டம் நடைபெற்ற போது எங்களுடைய பாதுகாப்பு சம்பந்தமாக வான் படையினரும் காவல் துறையினரும் என்னிடம் கேட்டபோது – அதிலும் விசேஷமாக என்னுடைய வீட்டுக்குள்ளே பாதுகாப்பு வழங்குவது சம்பந்தமாக என்னிடம் கேட்டபோது – நான் அதை மறுத்து இருந்தேன். அதேபோன்று வீட்டிற்கு வெளியிலே பாதுகாப்பு வழங்குவது சம்பந்தமாக கேட்டபோதும் என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்க செய்ததாக நீங்கள் எதையும் செய்யக் கூடாது என்பதைக் கூறியிருந்தேன்.

அது எப்படி என்றால் எனக்கு அந்தப் பாதுகாப்பு எவையும் வேண்டாம் என்ற கருத்தைத்தான் நான் கூறி இருந்தேன். ஆனால் அதையும் மீறி அங்குள்ள நிலைமைகளைக் கருதி எடுக்கின்ற முடிவுகள் அது அவர்களின் முடிவாக இருக்குமே தவிர நாங்கள் கேட்டமைக்காக செய்யப்பட்ட விடயங்கள் அல்ல.

ஆனால் நாங்கள் இங்கே ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அதாவது இந்தப் போராட்டங்கள் வெறுமனே எதிர்ப்புத் தெரிவிப்பதைத் தாண்டி என்னையும் எங்களது அமைப்பையும் அச்சுறுத்தும் வகையில்தான் நடைபெற்றிருக்கின்றன.

குறிப்பாக உதய கம்மன்பில்ல என்பவர் நான் கொழும்பிலே வசிக்க முடியாது என்றும், என்னையும் எனது குடும்பத்தையும் கொழும்பில் இருந்து தாங்கள் அப்புறப்படுத்துவோம் என்ற கோணத்திலும் கருத்துக்களைத் தெரிவித்து இருந்தார்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட கருத்து என்பது சட்டவிரோதம். ஆகவே இந்த நிலைமைகளைப் பார்த்து சட்ட விரோதமாக நடைபெறுகின்ற முன்னெடுப்புக்களுக்கு அரசு நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் அது அவர்களது விடயம்.

ஆனால் என்னைப் பொறுத்த வரையில் எந்த ஓர் இடத்திலும் எந்த ஓர் எதிர்பார்ப்போடும் நான் இல்லை. எங்களுடைய அமைப்பைப் பொறுத்த வரையில் ஆட்சியாளர்கள் இந்த நிலைமைகளைச் சரியாகக் கையாளுவார்கள் என்ற நம்பிக்கை எம்மிடம் கிடையாது.

ஆனால் அதைத் தாண்டி நாங்கள் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது பௌத்த மதத்திற்கோ சிங்கள மக்களிற்கோ எதிரான ஓர் அமைப்பு அல்ல.

சிங்கள மக்கள் வட கிழக்கில் கால் வைக்க கூடாது அல்லது சிங்கள மக்கள் தாங்களாகவே விரும்பி தமிழர்களோடு வாழ்வதற்கு முதலீடு செய்வதற்கும் எதிர்க்கின்ற ஒரு தரப்பாக நாங்கள் இருந்தவர்கள் கிடையாது.

ஆனால் கடந்த 75 வருடங்களாகத் திட்டமிட்ட வகையில் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, தமிழர்கள் தங்கள் நிலையைப் பலப்படுத்த முடியாத அளவிற்கு மட்டந் தள்ளி, போட்டி போட முடியாத அளவிற்கு அவர்களைப் பலவீனப்படுத்தி, இந்த நிலைமையை முற்று முழுதாகத் தமக்குச் சார்பாக பயன்படுத்தி சிங்கள குடியேற்றங்களை செய்வதற்கு எடுக்கின்ற முடிவுகளைத்தான் நாங்கள் எதிர்க்கின்றோம்.

தமிழ் மக்களோடு சேர்ந்து தாங்களாகவே வாழ விரும்புகின்ற தரப்புகளை நாங்கள் எதிர்க்கவுமில்லை. அது மட்டும் அல்லாமல் வட கிழக்கு தமிழர் தாயகத்தில் எத்தனையோ வருடக்கணக்காக கட்டப்பட்ட விகாரைகளில் வழிபாடு செய்து வந்த நிலைமை இருந்திருக்கின்றது. யுத்த காலத்திலும் கூட விகாரைகள அழிக்கப்படவும் இல்லை. அது புலிகள் இயக்கமாகவும் இருக்கலாம் அல்லது வேறு இயக்கங்களாகவும் இருக்கலாம். எவருமே அதில் கை வைத்ததாக இல்லை.

ஆனால இன்றைக்குப் போர் முடிந்து பலவீனமான நிலையில் தமிழர் தேசம் இருக்கவும், பல்கலைக்கழகங்களில் ஆயிரக்கணக்கான சிங்கள மாணவர்கள் இங்கு வந்திருக்கின்ற சூழலிலும் கூட அவர்களுக்கு எதிராக ஒரு சம்பவம் கூட நடைபெறவில்லை.

மிகவும் நாகரிகமாகவும் பொறுப்போடும் நடந்து கொள்கிறவர்கள் தமிழ் மக்கள். எங்களை இனவழிப்புச் செய்து கொண்டிருந்த காலத்திலும் கூட ஒரு வன்மத்தின் அடிப்படையில் பௌத்தர்களதோ சிங்களவர்களதோ சொத்துக்களை அழிக்க வேண்டுமென்ற கோணத்தில் நாங்கள் செயற்பட்டவர்கள் கிடையாது.

இது தான் உண்மையிலேயே தமிழ் மக்களின் நிலைப்பாடாக இருக்கலாம். இப்படி இருக்கவும் இன்றைக்கு இருக்க கூடிய நிலைமைகளைப் பயன்படுத்தித் தனியார் காணிகளை ஆக்கிரமித்து, தையிட்டியில் சட்டவிரோத விகாரை கட்டுவதும், குருந்தூர்மலையில் காலங்காலமாக இருந்த போதும் அந்த ஆலயம் அழிக்கப்பட்டு, நீதிமன்றக் கட்டளையைக் கூட மீறி, புது விகாரையைக் கட்டி அது சிங்கள, பௌத்தர்களின் வரலாறு என்று சொல்வதை ஒருபோதும் ஏற்க முடியாது.

அது உண்மையில் பௌத்த மதத்திற்குரிய தொல்பொருளா என்பது ஒரு கேள்விக்குறி. இரண்டாவதாக அப்படி இருந்தாலும் சிங்கள பௌத்தர்களினது என்று சொல்வது முற்றிலும் தவறான ஒரு திரிவுபடுத்தல். இதனையே செய்கின்ற போது இந்த எதிர்ப்புக்களைத் தெரிவிக்கிறோம்.

அது பௌத்த அடையாளத்தை எதிர்ப்பதாக அல்ல. மாறாக எங்களுடைய சரித்திரம், வரலாற்றை, உரிமையை மூடிமறைத்து இல்லாமல் செய்து திரிவுபடுத்தும் முடிவுகளைத் தான் நாங்கள் எதிர்க்கின்றோம்.

அது மட்டுமல்லாமல், தொல்பொருள் என்று அடையாளப்படுத்தியது வெறும் 70 ஏக்கர்தான். ஆனால் இன்றைக்கு 300 ஏக்கர் தொல் பொருளுக்குரியது என்ற நிலையை உருவாக்கி, ஒரு வர்த்தமானியை உருவாக்க முயற்சி நடக்கின்றது. எங்களுக்குத் தெரிந்த விடயங்களைத் தான் சொல்கிறோம். எங்களைப் பொறுத்த வரையில் இவற்றைத்தான் கடுமையாக எதிர்க்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரையில் இந்த உண்மைகள் சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும். அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். சிங்கள மக்கள் ஒரு நியாயமான நேர்மைத் தன்மையுடன் நியாயத் தன்மையுடன் இவற்றை விளங்கிக் கொள்ள வேண்டும்.

– என்றார்.

# கச்சத்தீவு மீட்பு விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது!



கச்சத்தீவு மீட்பு விவகாரம் என்பது மத்திய அரசின் கொள்கை ரீதியான முடிவு. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சென்னை மீனவர்கள் நலச்சங்கத்தைச் சேர்ந்த பீட்டர்ராயன், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு, ராமேஸ்வரத்தின் ஒரு பகுதியாக கச்சத்தீவு இருந்தது. 1974 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் இலங்கை இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் அடிப்படையில் கச்சத்தீவு இலங்கை வசம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில் பாரம்பரியமாக மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் தமிழக மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகின்றனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு 111 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள் கச்சத்தீவு ஒப்பந்தத்தை மீறிய செயலாகும். எனவே, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை மீட்கவும், 1974 ஆம் ஆண்டின் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்து கச்சத்தீவை மீட்கவும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனு தலைமை நீதிபதி கங்கபுர்வாலா, நீதிபதி சி.குமரப்பன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. மத்திய அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்என்றார்.

பின்னர் தலைமை நீதிபதி அமர்வு, கச்சத்தீவு மீட்பு விவகாரம் மத்திய அரசின் கொள்கை ரீதியான முடிவு. இதில் நீதிமன்றம் தலையிட முடியாது. மனு முடித்து வைக்கப்படுகிறது என உத்தரவிட்டது.

## ஆந்திராவில் இருந்து கஞ்சா கடத்தல்: பா.ம. க. பிரமுகர் உட்பட 16 பேர் கைது!

ஆந்திராவில் இருந்து தூத்துக்குடிக்கு கஞ்சா கடத்திய இலங்கை பிரஜை ஒருவரும், பாட்டாளி மக்கள் கட்சியின் பிரமுகர்கள் உள்ளிட்ட 16 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 228 கிலோகிராம் கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் இருந்து படகு மூலம் இலங்கைக்கு கஞ்சா அதிகளவில் கடத்தப்படும் நிலையில், அதனை தடுப்பதற்காக மதுவிலக்கு அமுலாக்க பிரிவினால் தனிப்படை அமைத்து சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, கடந்த 28 ஆம் திகதி மாலை தூத்துக்குடி - புதூர் பாண்டியபுரம் சுங்கச்சாவடி அருகே நடத்தப்பட்ட வாகன சோதனையில் 2 கார்களில் 50 இலட்சம் இந்திய ரூபா பெறுமதியான 228 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது, இரண்டு கார்களிலும் பயணித்த இரு பெண்கள் உள்ளிட்ட 6 பேர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளையடுத்து, மேலும் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியை சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் நிர்வாகி ஒருவர் கஞ்சா கடத்தல் சம்பவங்களின் மூளை யாக செயற்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சென்னை - நுங்கம்பாக்கம் பகுதியில் வசித்து வரும் இலங்கையர் ஒருவரும் சட்டத்தரணி ஒருவரும் சட்டக்கல்லூரி மாணவி ஒருவரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குகின்றனர்.

## நீட் மரணங்களுக்கு மத்திய அரசே காரணம்!

நீட் தேர்வினால் ஏற்படும் மரணங்களுக்கு மத்திய அரசே காரணம் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் நீட் தேர்வினால் மாணவர்கள் மாத்திரமன்றி அவர்களது குடும்பத்தினரும் உயிரிழக்கின்றனர் எனவும் கவலை தெரிவித்துள்ளார்.

## இலங்கையிலிருந்து தங்கம் கடத்தல்: இராமநாதபுரத்தில் பறிமுதல்!



இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல்வழியாக தமிழ்நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்ட 14.8 கிலோ தங்கம் இராமநாதபுரம் பகுதியில் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதனை எடுத்துச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து தனுஷ்கோடி வழியாக தங்கம் கடத்தி வரப்படுவதாக மத்திய வருவாய் புலனாய்வுத்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து மத்திய வருவாய் புலனாய்வு துறையினர் இராமநாதபுரம் கடற்கரை பகுதியில் தீவிர ரோந்த பணியில் ஈடுபட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அருகே களிமண்குண்டு கடற்கரை பகுதியில் இராமநாதபுரம் சுங்கத்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையின் போது குறித்த தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

# தென்னாப்பிரிக்காவில் 5 மாடி கட்டடத்தில் தீ: 73 பேர் பலி, 40 இற்கும் மேற்பட்டோர் காயம்!



தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ் பர்க் நகரில் உள்ள கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 73 பேர் உயிரிழந்துள்ளனர்.

40 இற்கும் மேற்பட்டோர் படுகாயங் களுடன் மருத்துவமனைகளில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

ஜோகன்னஸ்பர்க் நகரில் உள்ள ஐந்து மாடி கட்டடம் ஒன்றில் நேற்று திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சில நிமிடங்களிலேயே தீ கட்டடம் முழுவதும் பரவியதால், உள்ளே இருந்தவர்களால் அங்கிருந்து வெளியேற முடியவில்லை. இந்த தீ விபத்தில் 73 பேர் உடல் கருகி பரிதாபமாக பலியாகினர்.

நகரத்தின் மையத்தில் இருக்கும் விபத்து நடந்த மார்ஷல் டவுன் பகுதி, பராமரிக்கப்படாத பழைய கட்டங்கள் நிறைந்துள்ள பகுதி என்று கூறப்படுகிறது.

ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து சட்டவிரோதமாக குடியேறும் மக்கள் இத்தகைய கட்டடங்களில் தங்கியிரு கின்றனர் என கூறப்படுகிறது.

இதனால், உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் சட்டவிரோத குடியேற்ற வாசிகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 1.30 மணியவில் தீ பரவியுள்ளதுடன், அந்நேரத்தில் மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தாலும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிக ரித்துள்ளது.

## பிலிப்பைன்ஸில் குடியிருப்பு தொகுதியில் ஏற்பட்ட தீப்பரவலால் 15 பேர் உயிரிழப்பு!



பிலிப்பைன்ஸ் தலைநகர் மணி லாவில் உள்ள குடியிருப்பு தொகுதி ஒன்றில் இடம்பெற்ற தீப்பரவலில் சிக்கி 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் மூன்று சிறுவர்களும் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

தீப்பரவல் ஏற்பட்ட போது குறித்த பகுதியில் 18 பேர் இருந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தீ விபத்துக்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த தீப்பரவலில் காயமடைந்த சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஆப்கானிஸ்தானில் சுரங்கம் இடிந்து 3 பேர் பலி!

ஆப்கானிஸ்தானில் தங்க சுரங்கம் இடிந்து விழுந்ததில் 3 பேர் உயிரிழந் துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் வடக்கு தகார் மாகாணத்திற்குட்பட்ட ரஸ்தாக் பகுதியில் சுரங்கம் அமைத்து தங்கத்தை வெட்டி எடுத்து வந்தனர்.

இந்தநிலையில் சுரங்க தொழிலா ளர்கள் இந்த தங்க சுரங்கத்தில் வழக்க மான பணியில் ஈடுபட்டனர்.

அப்போது எதிர்பாராதவிதமாக சுரங்கம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் சுரங்கத்திற்குள் பணிபுரிந்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மண்ணுக்குள் புதைந்தனர்.

சுரங்கத்திற்குள் புதையுண்ட 3 பேர் மூச்சுத்திணறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


## அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் சூறாவளி!

அமெரிக்காவின் புளோரிடா மாநிலம் சூறாவளி காரணமாக கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளது.

குறித்த சூறாவளியானது கியூபா வில் இருந்து மணிக்கு 215 கிலோ மீற்றர் வேகத்தில் புளோரிடா மாநிலத்திற்குள் நுழைந்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த நிலையில், புளோரிடா மாநிலத்தில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புளோரிடாலில் மின் இணைப்புக்களும் முற்றிலும் முடங்கி யுள்ளது. அத்துடன், சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இதுவரையில் எந்த தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





# நானாட்டான் முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா

**(மன்னார் நிருபர்)**

மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (29) காலை இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் திருக் கேதீச்சரத்துக்கு அடுத்து பெரிய ஆலய மாக காணப்படும் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்துமாரி அம்மன் ஆலய மஹோற்சவத் திருவிழாவின் 14ஆம் நாள் தேர்த் திருவிழா ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.



# போதைப் பொருள் வியாபாரிகளிடம் இருந்து மாணவரைக் காப்பாற்ற படைப்பிரிவு அவசியம்



## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

போதைப் பொருள் வியாபாரம் காரணமாக, நம் நாட்டின் குழந்தைகள் மற்றும் பாடசாலை கட்டமைப்பு மிகவும் ஆபத்தானதாக மாறியுள்ளது. ஈஸி கேஷ் போன்ற முறைகள் மூலம் போதைப் பொருள் அரக்கன் பாடசாலைக் கட்டமைப்பு மற்றும் பாடசாலை மாணவர்களை விழுங்கிவிட்டது என்று நகர்ப்புற மற்றும் கிராமப்புற பாடசாலைகளுக்கு செல்லும்போது பெற்றோர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

பாடசாலை மாணவர்களிடம் இருந்து போதைப் பொருளை அகற்றுவதற்கான அவசர வேலைத் திட்டம் அவசியம். பிள்ளைகளை மையமாகக் கொண்ட போதைப் பொருள் வியாபாரத்துக்கு எதிரான கடுமையான சட்ட கட்டமைப்பு மற்றும் வேலைத் திட்டம் தேவை. பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பதற்குத் தனியான படையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

நம் நாட்டில் குழந்தைகளின் உரிமைகள் எந்த அளவுக்கு சட்ட விதிகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், குழந்தைகளின் உரிமைகளுக்கு மேலதிகமாக, அடிப்படை உரிமைகளுடன் தாய்மார்களின் உரிமைகள் என்ற தனி அலகையும் சேர்க்க வேண்டும்.

தாய்மார்களும் பிள்ளைகளும் எமது சமூகத்தில் பாதிக்கப்படக் கூடிய பிரிவினராக இருப்பதால் அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் அவர்களை அடிப்படை உரிமைகளில் உள்வாங்க வேண்டும்.
– என்றார்.

# கம்பஹாவில் குடிதண்ணீர் பிரச்சினைக்கு வந்தது தீர்வு

## ஆண்டு இறுதிக்குள் முழுமையாக முடிவுக்கு கொண்டு வர அமைச்சர் பிரசன்ன ஆலோசனை

கம்பஹா மாவட்டத்தில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினையை முழுமையாக தீர்க்கத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கம்பஹா மாவட்டத்தின் மொத்த குடிதண்ணீர்த் தேவை தொடர்பிலான முழுமையான அறிக்கையை வழங்குமாறு கம்பஹா மாவட்டச் செயலாளர் சமன் தர்ஷன படிகோரலவிடம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் இந்த வருட இறுதிக்குள் சுத்தமான குடிதண்ணீர் வழங்கப்படும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

கம்பஹா "லக் சியனே மதுர" வில் நேற்று (30) நடைபெற்ற கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இதனை வலியுறுத்தினார்.

கரஸ்னாகல நீர்த்திட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நிறைவடையவுள்ள நிலையில், கம்பஹா மாவட்டத்தின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமா என்று நீர் வழங்கல் சபையிடம் அமைச்சர் கேட்டார்.

கரஸ்நாகல நீர்த்திட்டம் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் திட்டத்தை நிறைவு செய்ய முடிந்தால் கம்பஹா மாவட்ட மக்களின் நீர் தேவையை பூர்த்தி செய்ய முடியும் எனவும் நீர் வழங்கல் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கரஸ்னாகல நீர்த்திட்டத்தை டிசெம்பர் மாத இறுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு திட்டவட்டமான பதில் வழங்காமைக்கான காரணம் என்ன என அமைச்சர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

டிசெம்பர் மாதத்துக்குள் அனைத்து குழாய்களையும் பதித்து முடிக்க முடியும் என்று குடிதண்ணீர் வழங்கல் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதேச செயலாளர் மட்டத்தில் ஒரு திட்டத்தை உருவாக்கி கம்பஹா மாவட்டத்தின் 90 வீதமான நீர் தேவையை பூர்த்தி செய்யுமாறு அமைச்சர் அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

அத்தனகல்ல நீர் திட்டம் டிசெம்பர் மாதத்துக்குள் பூர்த்தி செய்யப்படுமா என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கேட்டார். ஒரே நேரத்தில் வழங்கப்படுமா? மொத்த தேவையில் எவ்வளவு மட்டத்தால் ஈடு செய்யப்படுகிறது? இந்த விவகாரம் தொடர்பான அறிக்கையை விரைவில் வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப் விதான, மின்சக்தி



மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த, சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உபுல் மகேந்திர ராஜபக்ஷ, கம்பஹா மாவட்டச் செயலாளர் சமன் தர்ஷன பாடிகோரள, பிரதேச செயலாளர்கள், பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதிகள், பாதுகாப்பு படைத் தலைவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# புதியதோர் திருப்பத்தைக் காட்டியுள்ள

# ‘சொப்பன சுந்தரி’




‘சொப்பன சுந்தரி ‘ பார்த்தேன், ரசித்தேன்..! இலங்கை திரைப்படத் துறையில் மற்றுமோர் ஒளிக்கீற்றாய் அமைந்துள்ள திரைப்படம்! இலங்கை திரைப்படங்கள் என்றாலே பொதுவாக சில முத்திரைகள் குத்தப்பட்டுள்ளன. பிரதேச பேச்சு வழக்கு, இயல்பற்ற செயற்கைத் தனமான நடிப்பு, வலுவான திரைக்கதை அமைப்பு இல்லாமை, எடிட்டிங் பலவீனங்கள், சிறந்த இசை இன்மை என பலவிதமான குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டே வந்துள்ளன. இதனால் ரசிகர்கள் இலங்கை திரைப்படம் என்றால் ஆர்வம் காட்டாத போக்கே காணப்பட்டது . ஆனால், சமீப காலமாக இதில் பல நல் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மேற்குறிப்பிட்ட குறைகள் நிவர்த்திக்கப்பட்ட வகையில் இலங்கையில் குறும்படங்கள் மற்றும் திரைப்படங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. அதில் ‘கோமாளி கிங்ஸ்’ திரைப்படத்துக்கு அடுத்ததாக வெளிவந்துள்ள மற்றுமொரு சிறந்தவொரு திரைப்படமே ‘சொப்பன சுந்தரி ‘எனலாம்.

அதிலும் குறிப்பாக கோமாளி கிங்ஸ் திரைப்படத்துக்கு அடுத்ததாக வார்த்தக ரீதியிலும் தொழிநுட்ப ரீதியிலும் புதியதொரு மயில்கல்லை ‘சொப்பன சுந்தரி’ தொட்டுள்ளது . முழுநீள நகைச்சுவை திரைப்படம் என்றாலும் சஸ்பென்ஸ் கலந்த திரைப்படம் என்றும் இதனை கூறலாம். சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் ஒரு தாதா கும்பல் , மறுபுறம் சின்னத்தனமான திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடும் மூன்று இளைஞர்களைக் கொண்ட ஒரு குழு. கடத்தப்படும் போதைப் பொருள் தவறுதலாக இந்த மூன்று இளைஞர்களின் கைவசம் வந்து விடுகின்றது, இதனை அறிந்து கொள்ளும் தாதா கும்பல் தமது போதைப் பொருளை இளைஞர்களிடமிருந்து எடுப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சியே நகைச்சுவை கலந்து கதைக்களமாக விரிவடைகிறது.

இந்த இருதரப்பும் ஒரே நேர் கோட்டில் இணையும் புள்ளியாகவே சொப்பன சுந்தரி அமைகின்றது. இந்த திரைப் படத்தின் வெற்றியில் முத்தாப்பாய் அமைந்திருப்பது படத்தின் எடிட்டிங் தான். கடந்த காலங்களில் இலங்கை திரைப்படங்களில் நிலவிய எடிட்டிங் பலவீனம் இந்த திரைப்படத்தில் வெகு சிறப்பாக நிவர்த்திக்கப்பட்டுள்ளது. எடிட்டிங் செய்த இயக்குனர் மாதவனுக்கு பாராட்டுக்கள்.

மேலும், மூன்று இளைஞர்களாக (நண்பர்களாக) வருகின்ற மூவரின் நடிப்பும் வெகு இயல்பாக அமைந்துள்ளது. குறிப்பாக, பேபி என்ற பாத்திரத்தில் நடித்துள்ள இளைஞன் நடிகர் விஜய்யை நம் கண்முன்னே கொண்டுவருகின்றார். முகச்சாயலில் மட்டுமன்றி உடல் மொழி, பேசும் பாணி அனைத்திலும் விஜய் போலவே அவர் உள்ளார். டீச்சராக வரும் நிரஞ்சனி மீதான காதலின் போதாகட்டும், பொலிஸ் விசாரணைகளின்போதாகட்டும்அனைத் திலும் அவர் காட்டும் அப்பாவித்தனமான இயல்பான அந்த நடிப்பு கதைக்கு மேலும் பலம் சேர்க்கின்றது.

இப்படத்தின் இசை கூட இன்றைய ‘ட்ரென்டுக்கு’ ஏற்ப இசையமைக்கப் பட்டுள்ளமையால் இன்றைய இளைய தலைமுறையினர் ரசிக்கும் படியாகவே அமைத்துள்ளது. நமது எஃவ். எம். வானொலிகள் இப்பாடல்களை ஒலிபரப்பி ஊக்கப்படுத்த வேண்டும்.

‘சொப்பன சுந்தரி’ திரைப்படத்தில் அமைந்துள்ள மற்றுமொரு சிறப்பான அம்சம், நடித்துள்ள நடிகர்கள் அனைவருமே பேசும் போது வாசனங்களை மனனம் செய்து ஒப்புவிப்பது போல் அல்லாமல் வார்த்தைகளை வெகு இயல்பாக டெலிவரி செய்வது கதையை சிதறடிக்காமல் காக்கின்றது. மூன்று இளைஞர்களின் சிறுபராயத்தை காட்டும் ஃளாஷ்பெக் காட்சிகளில் வரும் சிறுவர்கள் மூவரும் கூட அந்த அடாவடி நடிப்பை சிறப்பாகவே செய்துள்ளனர்.

கடத்தல் கும்பலின் தலைவர் மற்றும் தாதா பாத்திரத்தை ஏற்றுள்ள இயக்குனர் மாதவன் ஆகியோர் அடுத்த கட்டமாக என்ன செய்வார்களோ என்றவோர் எதிர்பார்ப்பை ஏற்படுத்துகின்றனர். பொலிஸ் சி.ஐ.டி. பாத்திரமேற்றுள்ளவரும் அசல் சி.ஐ.டி. போலவே நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் திரைத் துறையில் நீண்ட காலமாக இருந்து வரும் நிரஞ்சனி ஷண்முகராஜா டீச்சர் கதாபாத்திரத்தில் அந்த இளைஞர்கள் மீது காட்டும் கோபம், காதலில் வழிதல் போன்ற காட்சிகளில் அவரது அனுபவத்தை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

ஒளிப்பதிவில் கொழும்பு நகரம் அழகுபட காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கடத்தல்காரர்களின் காரை தேடுதல் செய்யும் அந்த காட்சியும் தத்ரூபமாக படமாக்கப்பட்டுள்ளது. திரைப்படத்தின் இயக்குனரான மாதவன் மகேஸ்வரன் திரைப்படத்தை சிறப்பாக ஒருங்கமைத்து கடின உழைப்பை செலுத்தியுள்ளார்.

மொத்தத்தில் ‘சொப்பன சுந்தரி’ சோர்வை ஏற்படுத்தவில்லை, விறுவிறுப்பை ஏற்படுத்தியுள்ளது. நிறைகள் நிரம்ப இருப்பதால் குறைகளைத் தேட மனம் விரும்பவில்லை. ‘சொப்பன சுந்தரி ‘ நம்மவர்களின் படைப்பு. புதியதோர் திருப்பத்தை காட்டியுள்ள திரைப்படம். நம்மாலும் முடியும் என உணர்த்தியுள்ள திரைப்படம். கோடிகளிலான வசூல் சாதனைகளில் பங்களிப்பு செய்யும் நம்மவர்கள் இதுபோன்ற திரைப்படங்களை ரசிக்க திரையரங்கம் நாடிவர வேண்டும். அனுதாபம் தேவையில்லை அபிமானமே தேவை.

- வி. ரெட்லி ஹெரிசன் -




# யொலி லெஜண்டஸ் லீக் கிரிக்கெட் கிண்ணத்தை வென்றது வை.எம்.எச்.ஏ.

யாழ்ப்பாணம் யொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான யொலி லெஜண்டஸ் லீக் ரி-20 கிரிக்கெட் சுற்று போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக தலைவர் வி.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சாந்திரட்ணம் ஜெயபிரகாஸ் மற்றும் துரைராஜா பிரபாகரன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இறுதிப்போட்டியில்ஸ்ரான்லிவிளையாட்டு கழகத்தை எதிர்த்து வை.எம்.எச்.ஏ. விளையாட்டு கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வை.எம்.எச்.ஏ. அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 217 ஓட்டங்களை பெற்றது. இதில் அருள்ராஜ் 110 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 149 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 68 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக வை.எம்.எச்.ஏ. வீரர் அருள்ராஜும் ஆட்ட தொடர் நாயகனாக சென்றலைட்ஸ் அணி வீரர் சாயிதர்சனும் தெரிவாகினர்.

இறுதிப் போட்டியில் பசுமைப் புரட்சியை நோக்காக கொண்டு வீரர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப் பட்டன.

இறுதி போட்டியில் யொலிஸ் ரார்ஸ் விளையாட்டு கழகத்தால் யாழ். இந்துக் கல்லூரிக்கு துடுப்பு மட்டையும் ஸ்கோர் போர்ட்டும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.






## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# தண்ணீர் வசதி இன்மையால் நோயாளர்கள் பெரும் அவதி!

**த.சுபேசன்**

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் நோயாளர் விடுதிகளில் மலசலகூடம் மற்றும் குளியலறை ஆகியவற்றுக்கான நீர் விநியோகம் நிறுத்தப்பட்டிருப்பதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக நோயாளர்கள் கருத்து தெரிவிக்கையில்–

ஆதார வைத்தியசாலையின் 3 ஆம் இலக்க பெண் நோயாளர் விடுதியில் நோயாளர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படும் நிலையில் குளியலறை மற்றும் மலசலகூடம் ஆகியவற்றுக்கான நீர் வசதி நிறுத்தப்பட்டிருப்பது பெரும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது. விடுதிக்கு வெளியே சென்று நீர் எடுத்து வந்தே குளியலறையில் முகம் கூட கழுவ வேண்டிய நிலை காணப்படுகிறது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் சில திருத்த வேலைகள் இடம்பெறுவதால்தான் நோயாளர் விடுதியின் குளியலறை மற்றும் மலசலகூடங்களுக்கான நீர் விநியோகத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது என்றும் கூடிய விரைவில் சீர் செய்யப்பட்டு நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் எனவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# காங்கிரஸ் முன்னாள் தலைவர் அஸ்ரப்பின் சிரார்த்த நிகழ்வு பற்றிக் கலந்துரையாடல்



(பௌசுல் றிபாஸ்)

மறைந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் தலைவர் எம்.எச். எம்.அஸ்ரப்பின் 23வது சிரார்த்த தின நிகழ்வு எதிர்வரும் செப்டம்பர் 16 ஆம் திகதி சாய்ந்தமருதில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கட்சியின் ஏற்பாட்டில் தேசிய நிகழ்வாக நடைபெறவுள்ள இந்தச் சிரார்த்த தின நிகழ்வு சம்பந்தமாக சாய்ந்தமருது பிரதேச கட்சிப் பிரமுகர்களுக்கு தெளிவு படுத்தும் ஆரம்ப கட்டக் கூட்டம் கட்சியின் தவிசாளர் அப்துல் மஜீத் தலைமையில் முன்னாள் கல்முனை மாநகர முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு தொடர்பான கலந்துரையாடலொன்று கலாநிதி சிறாஸ் மீராசாஹீப் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை (01)அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கட்சியின் தேசிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.



# வீட்டுத்தோட்ட உபகரணங்கள், உணவு பொதி வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

சமூக அபிவிருத்தி நிறுவனம் காரைதீவு ஸ்பீட் நிறுவனத்துடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் 10 கிராமங்களை உள்ளடக்கியதாக சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தச் செயற்பாடுகள் ஊடாக 10 கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களின் இயலுமையை வலுப்படுத்தி அவர்கள் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

இன்றைய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பல்வேறு சமூக முரண்பாடுகளையும் ஏற்படுத்துகின்றது. இதனை குறைக்கும் நோக்குடன். குறிப்பிட்ட கிராம ஒத்துழைப்பு மன்றத்தின் அங்கத்தவர்களுக்கு வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையை ஊக்கப்படுத்தும் நோக்குடன் பயிர் செய்கையை மேற்கொள்வதற்கான உபகரணங்களும்,




உலர் உணவு பொதியும் வழங்கும் நிகழ்வு காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் சமூக அபிவிருத்தி நிறுவன பிராந்திய இணைப்பாளர் எம்.எஸ். ஜலீல் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்கிரமும், கௌரவ விருந்தினராக காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜனும், சிறப்பு விருந்தினர்களாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், பங்காளர் நிறுவனமான ஸ்பீட் நிறுவன செயலாளர் வீ ஜனார்த்தனன், உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான வலையமைப்பு மற்றும் இந்தத் திட்டத்துக்கான ஸ்பீட் நிறுவன இணைப்பாளர் எம்.ஐ.றியால் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் காரைதீவு, கல்முனை வடக்கு மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 75 கிராம ஒத்துழைப்பு மன்ற அங்கத்தவர்களுக்கு உதவிகள் வழங் கப்பட்டன.

# இன்றைய ராசி பலன்கள் - 01.09.2023




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது. இன்று உங்களிடம் எதையோ இழந்தது போன்ற உணர்வு இருக்கும் என்பதால் பொறுமை அவசியம் மேற் கொள்ள வேண்டும்.

நீங்கள் பணி செய்யும் விதத்தை திட்டமிட வேண்டும். கவனமாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது இன்று அவசியம்.

மகிழ்ச்சி யின்மை காரணமாக உங்கள் துணையிடம் குறைந்த புரிந்துணர்வு காணப்படும். உங்கள் மன நிலையை மாற்றிக் கொண்டு நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பண இழப்பை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு கவலை ஏற்படுத்தும். நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும்.

தூக்கமின்மை மற்றும் பதட்டம் காரணமாக இன்று கால் வலி காணப்படும்.




இன்று உங்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும் நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது. நீங்கள் நல்ல நேரத்தை கொண்டாடி மகிழலாம்.

இன்று உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டிய சூழல் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு மற்றும் பாராட்டு பெறுவீர்கள். பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். நிதி நிலையில் சுதந்திரம் காணப்படும்.




இன்று உங்கள் கடின உழைப்பிற்கான பலன்களைக் காண்பீர்கள். இன்று முன்னேற்றங்கள் கிடைக்கும். மொத்ததில் நல்ல பலன் கிடைக்கும் நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக பணி புரிவீர்கள். பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். உங்களின் அனுசரணையான போக்கின் மூலம் இது சாத்தியம்.

நிதி நிலையில் சிறப்பான முன்னேற்றம் காணப்படும். கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். மகிழ்ச்சி காணப்படும்.

ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை இன்று சிறப்பாக இருக்கும். உங்களின் திருப்தியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் அமைதி காண்பீர்கள். உங்கள் செயல்களில் உணர்வுப் பூர்வமாக செயல்படுவதை விட யதார்த்தமாக செயல்படுவது நல்லது. எல்லாவற்றிலும் அமைதியான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேராதபடி இன்று நீங்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும். உங்கள் பணிகளை முறைபடுத்தி ஆற்ற கற்க வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்வீர்கள். நட்பாக நடந்து கொண்டு நல்லுறவை வளர்த்துக் கொள்வது நல்லது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.




ஏழைகள் மற்றும் உடல் ஊன முற்றோருக்கு பண உதவி செய்ய இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் மகிழ்ச்சியாக இருப்பது போல உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொண்டால் நல்ல பலன் கிடைக்கும். சக பணியாளர்களால் சில தொல்லைகளை சந்திக்க நேரலாம்.

உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்க்கவும். இதனால் சில விரும்பத்தகாத சூழ்நிலையை தவிர்க்கலாம். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும்.

அதிகமாக வருத்திக் கொள்வதன் காரணமாக இன்று உங்களுக்கு முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனதில் சமநிலை உணர்வு காணப்படும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலன் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். பணியிடத்தில் உற்சாகமான நிகழ்சிகள் நடக்கும்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள். இந்தப் போக்கின் காரணமாக இருவரிடையே வலுவான பிணைப்பு ஏற்படும்.

நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். இந்த வளர்ச்சி உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களிடம் அதிக உறுதி காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.




இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நீங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று பல சௌகரியங்களை நீங்கள் உணரலாம்.

நீங்கள் செய்யும் பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் தனித்திறமையை வெளிப்படுத்தி அதற்குரிய அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப்பீர்கள். இதனால் அவரிடம் மகிழ்ச்சி காணப்படும். நீங்களும் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் தேவைகளை சிறிய கடன் மூலம் பூர்த்தி செய்து கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஸ்திரமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று நற்பலன்கள்காண நீங்கள் யதார்த்தமான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும். சுய முயற்சி நல்ல பலன் தரும்.

உங்கள் பணியில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். பணிகளை கவமாகக் கையாள நீங்கள் பணி சார்ந்த முறையில் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்தி குறைந்து காணப்படும். உங்கள் இருவரிடையே தவகல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் விரும்பும் பணம் உங்களுக்கு கிடைக்காது. இறுதியில் கடன் வாங்குவீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதட்டம் காரணமாக கால் வலி காணப்படும். அமைதியாக இருப்பது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் -01.09.2023




இன்று முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். உங்கள் செயல்களில் சிறிது கவனம் தேவை. இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படலாம். அதனை தவிர்ப்பது நல்லது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது ஏமாற்றங்களையும் தடைகளையும் சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடனான தொடர்பு பயனுள்ளதாக இருக்காது. நீங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி தக்க நேரத்தில் முடிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அமைதியற்ற உணர்வு காண்பீர்கள். எனவே எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு நட்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பணம் பற்றிய கவலை காணப்படும். அதிக செலவுகள் உள்ள காரணத்தால் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் சீராகச் செல்லும். மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். இன்று நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். இதனை உங்கள் முன்னேற்றத்திற்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் பணிக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் உறவுமுறையில் ஆர்வமுடன் இருப்பீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே திருப்தி காணப்படும்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும் . உங்களிடம் உற்சாகமான அணுகுமுறை காணப்படும். நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

இன்று மனதில் அமைதியையும் நேர்மறை ஆற்றலையும் உணர்வீர்கள்.




உங்கள் பணிகளை முடிக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்களின் வளர்ச்சி உறுதி. நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் நல்ல முடிவுகளை எடுக்க இயலும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். தரமான பணிகளை வழங்குவீர்கள்.

உங்கள் துணையிடம் பேசுவதை மகிழ்ச்சியாக உணர்வீர்கள். இருவரும் இணைந்து நேரத்தை சிறப்பாக கழிப்பீர்கள்.

நிதி நிலைமை பாதுகாப்பாக இருக்கும். பணத்தை பொறுத்தவரையில் பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை நீங்கள் சுமூகமாக மேற்கொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று நீங்கள் நம்பிக்கை இழக்க நேரலாம். எனவே உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளும்போது கவனம் தேவை.

உங்கள் இருவரிடையே இருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் திருப்தி குறைந்து காணப்படும். உறவில் நல்லிணக்கம் பேண இருவரும் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.





